விலை: சதம் 60

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆனி 10 ஷஃபான் 21 இதழ் 130
யாழ்ப்பாணம் புதன்கிழமை 24-6-1981

யாழ். நூலகத்தை எரித்த பொலிசாரில் சிலர் யூனிபோம் அணிந்திருந்தனர்

மாநகரசபை காவலாளி சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

'யாழ். பொதுநூலகத்தை எரித்த பொலிஸாரில் சிலர் யூனிபோம் அணிந்திருந்தார்கள். அவர்களில் சிலரை என்னால் அடையாளம் காட்ட முடியும்.'

யாழ். மாநகரசபை காவலாளி திரு.பி. விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினர். இவர் உயர் மட்ட பொலிஸ் விசாரணைக் குழு முன் சாட்சியமளித்தார்.

பி. விக்னேஸ்வரன் இச்சம்பவம்பற்றி மேலும் கூறியதாவது:

'1-ம் தேதி இரவு 9-15 மணியளவில் யாழ். மாநகரசபை ஆணையாளர் எனக்கு போன் செய்தார். பெரியகடை மார்க்கட் கடைகள் எரிவதாகவும், 2 தண்ணீர் பௌசரைத் தயாராக வைத்திருக்கும்படியும்,

[6-ம் பக்கம் பார்க்க]

மாற்றம்பெறும் பொலிஸார் மீது கொழும்பில் விசாரணை

மேலும் பலர் இடமாற்றம் செய்யப்படலாம்

(நமது சிறப்பு நிருபர்)

'யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் 31-ம் திகதிக்குப் பின்னர் சில தினங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்த வன்செயல்கள் தொடர்பாக நடைபெற்றுவரும் உயர்மட்டப் பொலிஸ் குழு விசாரணையில் பல அதி முக்கிய தகவல்கள்- திடுக்கிடும் விபரங்கள் வெளியாகியுள்ளன. இத்தகவல்களின் அடிப்படையில் பல பொலிசார் ஏற்கனவே யாழ். மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இடமாற்றம் செய்யப்படும் பொலிசார்மீது கொழும்பில் விசாரணை நடைபெறும். விசாரணையில் இவர்கள் குற்றவாளியாகக் காணப்பட்டால் கடுமையான நடவடிக்கைக்குள்ளாவார்கள்'

பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் எனக்கு அளித்த விசேட பேட்டியில் மேற்படி தகவலை வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த வன்செயல்கள் தொடர்பாக விசாரணை நடத்த, பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் பதினறு பேர் கொண்ட உயர் மட்டப் பொலிஸ் குழு இம் மாதம் 13ம் திகதி யாழ் வந்ததும், அடுத்த தினமே விசாரணை ஆரம்பமானதும் தெரிந்ததே.

முதல் கட்ட விசாரணை முடிவடைந்து டி. ஐ. ஜி திரு. ஆர் சுந்தாலிங்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு திரும்பினர். ஏனைய பொலிஸ் அதிகாரிகள் இப்பொழுது விசாரணை நடத்தி வருகின்றனர். இவ்விசாரணைகள் இவ்வாரம் பூர்த்திபெறும்.

[6ம்பக்கம் பார்க்க]

உயிருடன் குட்டிமணி

[கொழும்பு]

'குட்டிமணி' எனப்படும் செல்வராசா யோகச்சந்திரன் உயிருடன் இருப்பதாக கொழும்பு பதில் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம். எஸ். எல். சல்காடோ தமது வைத்திய அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

[6ம் பக்கம் பார்க்க]

தியாகர்கொலை அணிவகுப்பு மீண்டும் ஒத்திவைப்பு

இன்று நடைபெறும்

[சுன்னாகம்]

முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி.யும், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட சபை வேட்பாளருமான கலாநிதி ஆ. தியாகராசா கொலை தொடர்பான அடையாள அணிவகுப்பு இன்று காலை வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று அடையாள அணிவகுப்பு நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிறைச்சாலை அதிகாரிகளால் சந்தேகநபர்களான இருவரும் மூடி மறைக்கப்பட்ட சிவப்பு நிற மோட்டார் வாகனத்தில் கொண்டுவரப்பட்டனர்.

கோர்ட்டில் இருந்த சகலரும் வெளியேற்றப்பட்டதுடன், அடையாள அணிவகுப்பில் இடம்பெற 24 பொது மக்களும், சில சட்டத்தரணிகளும் மாத்திரம் உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

மாவட்ட பதில்நீதிபதி திரு. வி.பாலசிங்கம் முன் அணிவகுப்புக்கு ஆயத்தமான போது சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், கே. விக்னராஜா ஆகியோர் சந்தேகநபர்களான சகோதரர்கள் வீரசிங்கம் இராஜேந்திரம்,

[6ம பக்கம் பார்க்க]

சுன்னாகம், காங்கேசன்துறையில்

தீவைப்பு, கொள்ளைகளினால் ரூ.ஒன்றரைக்கோடி சேதம்

மேலும் 14 பொலிசார் இடமாற்றம்

[ஏ. வி. எம்.]

சுன்னாகம், காங்கேசன்துறைப் பகுதிகளில் மே மாதம் 31ந் திகதி முதல் ஜூன் மாதம் 5ந் திகதி வரை இடம் பெற்ற வன்செயல்கள் காரணமாக ஒன்றரைக் கோடி ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதென நேற்று வரை நடைபெற்ற விசாரணைகள் மூலம் பொலிஸ் உயர் மட்ட விசாரணைக்குழு மதிப்பீடு செய்துள்ளதாகத் தெரிகிறது.

சுன்னாகம் காங்கேசன்துறை ஆகிய இடங்களில் சென்ற மாதம் 31ந் திகதி முதல் தொடர்ச்சியாக நடைபெற்ற வன்செயல்கள் தொடர்பாக உதவிப் பொலிஸ் அதிபர்களான திரு.பெனட் பெரேரா, திரு. ஸ்டீபன் ஆகியோர் தலைமையில் இன்ஸ்பெக்டர்கள் திரு. சர்வானந்தன், திரு. வீரக்கோன், திரு. ஞானப்பிரகாசம், திரு. கிருஷ்ணராசா ஆகியோர் விசாரணைசெய்து வருகின்றனர்.

சுன்னாகம் பட்டினசபை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விசாரணையின் போது நூற்றுக்கு மேற்பட்டோர் சாட்சியமளித்துள்ளனர்.

59 தீவைப்பு. கொள்ளை, 5 கொலைகள்

68 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 59 தீவைப்பு, கொள்ளைச் சம்பவங்களும், 9 வன்முறை சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

[6-ம் பக்கம் பார்க்க]

அரிய சந்தர்ப்பம்!
ரூபா 1000 - லாபமடையுங்கள்
உங்கள் பயணத்திற்கு இதமான சொகுசு தரும்
வெஸ்பா ஸ்கூட்டர்களுக்கு
விசேட கழிவு வழங்கப்படுகிறது
ரூபா 1000/- விசேட விலை: ரூபா 16500/. மட்டுமே
விரையுங்கள்........
சி. சின்னத்துரை அன் கொம்பனி,
25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7357

ஹோம் பினன்ஸ் லிமிட்.
82, கன்னாதிட்டி, (போன்: 8310) யாழ்ப்பாணம்.
வருடாந்தம் ஆகக்கூடுதலான
25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000-க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
1981-1-1-ல் எம்மிடம் இருந்த வைப்பாளர்
அனைவருக்கும் வைப்பு முடிவு காலத்தில்
3 வீத மேலதிக போனஸ்
எமது லாபத்திலிருந்து வழங்கப்படும்.
உங்கள் பணத்தை விவேகமாக
முதலீடுசெய்யுங்கள்.
தலைமையகம்: 463, காலி வீதி, கொழும்பு-3
தொலைபேசி: 89190

வரி விளம்பரம்

விற்பனைக்கு

7 இஞ்சி மரம் சீவும் மெஷின் (Universal Wood Working Machine) புதிதாக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது ராதா மெசின் கொம்பனி, 95 ஆஸ்பத்திரி வீதி [திருவள்ளுவர் சிலைக்கு அருகாமையில்] 586, கண்டி றோட், அரியாலை, [நெடுங்குளம் சந்தி] யாழ்ப்பாணம். 0091

பாவித்துக் கழித்த 45 கலன் வெற்று தகர விற்பனைக்கு உண்டு மில்க்வைற், யாழ்ப்பாணம். 0088

கொக்குவில் கே கே எஸ் வீதியிலுள்ள பரணி பலசரக்குக் கடை முழு தளபாடங்களுடன் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு எஸ். பாலசந்திரன் சி. சி. ரி எம். ஸ்கூல் கொக்குவில் மேற்கு 0099

தேவை

நாவாந்துறை பல்வைத்திய சாலைக்கு ஒரு நடுத்தர வயதுப் பெண் உதவிக்கு தேவை. நேரில் வரவும். முகவரி டாக்டர் V T. பெர்னாண்டோ 81 பாங்சால் வீதி, யாழ்ப்பாணம். 0097

விறகுகாலைத் தராசுகள் இரண்டு வேண்டும் விலையைக் குறிப்பிட்டு தொடர்பு கொள்ளவும். S. A. தர்மலிங்கம் 54, விபுலானந்த வீதி, கொழும்புத்துறை. 0095

காணவில்லை

யாழ்ப்பாணம் கே. கே எஸ் வீதியில் இருந்து அரசடி வீதி வழியாக சைக்கிளில் சென்று கொண்டிருக்கையில் தஸ்தவேஜுகள் அடங்கிய டயறியொன்றும், நீதிமன்ற குறிப்பேடுகளும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். க. ருஜா நட் பிரிட்ஜ் கல்விநிலையம் செங்குந்தா ஒழுங்கை, கல்வியங்காடு. 0102

பயிற்சி

பிரபல கல்வி நிறுவனத்தில் றீவைண்டிங் [Rewinding] மூன்றுமாத டிப்ளோமா பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது. ஆர்வமுள்ளவர்கள் 30-6-81 முன்பாக விபரங்களுக்கு எழுதவும். விளம்பர இல; 0101 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 0101

ஏல விற்பனவு

ஊர்காவற்றுறை "ராஜ் வேல்ஸ்", 115, ஆஸ்பத்திரி வீதி, ஆ. சத்திவடிவேல் அவர்களிடம் 1-4-76 முதல் 31-3-80 வரை அடைவுவைத்து மீட்கப்படாத நகைகள் 11-7-1981 காலை 9 மணி தொடக்கம் அதேயிடத்தில் வைத்து விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்
643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

0057

5 எதிர்க்கட்சிகளின் கண்டனக் கூட்டம்

[கொழும்பு]

ஐந்து எதிர்க்கட்சிகள் கொழும்பில் நடத்தவிருக்கும் முதலாவது கண்டனக் கூட்டம் நாளை கொழும்பு ஹைட் பார்க்கில் நடைபெறவிருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அதன் தலைவரும் நல்லூர் எம். பியுமான திரு. எம். சிவசிதம்பரம், மானிப்பாய் எம். பி திரு. வி தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு பேச இருக்கிறார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார்.

பருத்தித்துறையில் நடைபெற்ற உண்ணாவிரதம்

(புலோலி)

"சாத்வீகத்தால் நம்பிக்கை கொண்டு ஏற்பட்டிருக்கும் எம்மீதே கொடுமைகள் இழைக்கப்படுகின்றன. ஆயுதம் தாங்காதவர்கள் ஆயுதமற்ற எங்களின் உடைமைகளையும், உயிர்களையும் சேதப்படுத்தி வருகின்றனர்".

மேற்கண்டவாறு பருத்தித்துறை நகரசபைத்தலைவர் திரு வேலுமயிலும் பருத்தித்துறை முனியப்பர் ஆலய முன்றலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஐந்தம்சக் கோரிக்கையை வலியுறுத்தி நடைபெற்ற உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் "எமது இனம் ஆயுதம் தாங்கி போராடக்கூடிய நிலையில் இல்லை. ஆத்மீகத்தின் மூலம் எமது விடுதலையை நிச்சயம் நாம் பெறுவோம்" என்றார்.

சுவாமி சிதருபானந்தா உரையாற்றுகையில் "உடல், உளத்தூய்மையுடன் நாம் இறைவனை வணங்கவேண்டும். அப்படி இறைவனை வணங்கும் போது நிச்சயம் அவனின் அருள் எமக்கு கிடைக்கும். ஆத்மீகத்தில் ஈடுபடுவதன் மூலம் நாம் எமது வெற்றியைப் பெறமுடியும்" என்றார்.

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற தலைவர் திரு. கே குமாரவேலு தலைமையில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் பலர் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரதத்தை யொட்டி நடைபெற்ற கூட்டத்தில் திரு கே. இராசரத்தினம், திரு கே அழகரத்தினம், செல்வி சந்திரகௌரி குமாரவேல், பண்டிதர் கிருஷ்ண பிள்ளை, திருமதி புவனராணி. திரு. எம். ஜெயக்கொடி உட்பட பலர் உரையாற்றினர்.

(வெ)

அபிவிருத்திசபைகள் சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

"மாவட்ட அபிவிருத்தி சபைகள் சட்டத்தில் சில மாற்றங்களைச் செய்வதற்காக திருத்த சட்டமூலம் ஒன்றை உயர் நீதிமன்றம் பரிசிலனைக்கு எடுக்கவிருக்கின்றது.

இந்தத் திருத்தச் சட்டமூலத்தில் பிரிவுகள் ஏதாகிலும் அரசியல் சட்ட விதிகளுக்கு முரண்படுகின்றனவா என்பதை ஆராய்ந்து அறிவிக்குமாறு ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜயவர்த்தனா உயர் நீதிமன்றத்தைக் கேட்டிருக்கிறார்.

பிரதம நீதியரசர் திரு. நவில் சமரக்கூன், நீதியரசர் ஐ எம். இஸ்மாயில், நீதியரசர் திரு. ஆர். எஸ் வனசுந்தர ஆகியவர்கள் இச்சட்டமூலம் பற்றி ஆராயும் உயர்நீதிமன்றக் குழுவில் அங்கம் வகிப்பார்கள். வியாழக்கிழமையன்று அட்டோர்னி ஜெனரலின் விவாதத்தை நீதியரசர்கள் கேட்கவிருக்கிறார்கள்

அறிவித்தல்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில் 9000ற்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும் கழிவு மா, கழிவு சீனி ஆகியனவும் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்குண்டு. ரூ. 250/- வைப்புப்பணமாக தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரம் 26-6-81ம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12-00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்கத்தில் "சாக்குக் கேள்விப்பத்திரம்" எனக் குறிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் 26-6-81ம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12-00 மணிக்கு சங்க உபசபையினரின் முன்னிலையில் திறக்கப்படும்.

பொதுமுகாமையாளர்
தெல்லிப்பழை
ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பழை.
20-6-81.

0103

பிரதமர்கள் நினைவாக

[கொழும்பு]

மீரிகம தேர்தல் தொகுதியிலுள்ள போதலையில் காலஞ்சென்ற பிரதமர்களான திருவாளர்கள் டி. எஸ் சேனநாயக்க, டட்லி சேனநாயக்க ஆகியோரின் வாசஸ்தலமான "போதல வளவை"யில் கலாசார நிலையமாகவும் நூதனசாலையாகவும் அமைப்பதற்கான திட்டம் ஒன்றை டி. எஸ். டட்லி சேனநாயக்கா ஞாபகார்த்தக்குழு தீர்மானித்துள்ளது.

இரு பிரதமர்களாலும் பாவிக்கப்பட்ட சகல பொருட்களும் மேற்படி நூதனசாலையில் வைக்கப்படும். (து)

விளையாட்டு மைதானம்

[மன்னார்]

தலைமன்னார் மேற்கில் 12 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் விளையாட்டு மைதான வேலைகள் யாவும் இன்னும் சில நாட்களில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விளையாட்டு மைதானம் தலைமன்னார் கிராமாட்சி மன்றத்தினால் அமைக்கப்பட்டு வருகிறது. தலைமன்னார் கிராமாட்சி மன்ற விசேஷ ஆணையாளர் திரு. எஸ். நீலகலால் மேற்பார்வையில் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திருமதி சிறிமா மட்டக்களப்பு விஜயம்

(மட்டக்களப்பு)

குடியியல் உரிமை இழந்த பின்னர் முதந்தடவையாக ஜூலை மாதம் 11ம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்யும் முன்னாள் பிரதமரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியுமான திருமதி ஸ்ரீமாவோ ஆர் டி. பண்டாரநாயக்காவுக்கு பெரும் வரவேற்பொன்று மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கிளையினரால் அளிக்கப்படவுள்ளது

இது சம்பந்தமாக அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் அதிகாரியும் மாவட்ட அமைப்பாளருமான திரு இராஜன் செல்வநாயகம் மாவட்டக் கிளைப் பிரமுகர்களைக்கொண்ட ஆலோசனைக் கூட்டமொன்றை செல்வநாயகம் மண்டபத்தில் நடத்தினார்

இக்கூட்டத்தில் பட்டிருப்பு முன்னாள் எம். பி திரு எஸ். யூ தம்பிராஜா, அபிவிருத்திச்சபை சுயேச்சை வேட்பாளர் ஜனாப் மோகமட் தம்பி, கல்குடா தொகுதி அமைப்பாளர் திரு தர்மதாசா, முஸ்லிம் பகுதி அமைப்பாளர் ஜனாப் அபூபக்கர் லெப்பை உட்பட தமிழ், முஸ்லிம், சிங்கள பிரமுகர்கள் சுமார் ஆயிரம் பேர்வரை சமூகம் கொடுத்தனர்.

மட்டக்களப்புக்குவரும் முன்னாள் பிரதமர் மட்டக்களப்பு மாநகர நுழைவாயிலான ஊறணிச் சந்தியில் இருந்து திறந்த ஜீப்பில் பொதுக் கூட்டம் நடைபெறும் மைதானம்வரை சீனடி, சிலம்படி, கண்டி நடனம், மேளக்கச்சேரி சகிதம் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். இதனையொட்டி சுமார் இரண்டு மைல் வரை 125 மகரதோரணங்களும், அலங்கார வளைவுகளும் அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது

யாழ்.வன்செயல்கள் பற்றி

பொலிஸ் உத்தியோகத்தர் இரகசிய வாக்குமூலம்

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற வன்செயல்கள் குறித்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் திடுக்கிடுந்தகவல்களை விசாரணைக்கமிஷன் முன் இரகசிய வாக்குமூலம் அளித்துள்ளதாகத் தெரிகிறது.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சுன்னாகத்தில் இடம்பெற்ற தீவைப்பு, வன்செயல்கள், கொள்ளையடிப்பு சம்பந்தமாகப் பொலிசார் விளைத்த அனர்த்தங்கள் குறித்து, இரகசிய வாக்குமூலம் அளித்துள்ளாரென்றும், இதைத் தொடர்ந்து மேலும் பல தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாக்குமூலமளிக்க முன்வந்துள்ளதாகவும் தெரிகிறது.

சாட்சியமளித்த பொலிஸ் உத்தியோகத்தர் கடமையிலிருந்து ஓய்வுபெறப் போவதாகவும் அவ்வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

நினைவுநாளும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

மகாஜனக்கல்லூரி நிறுவியவர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் இன்று மாலை 6 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதன்மைவிருந்தினராக வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு க சிவநாதன் கலந்துகொள்வார். திருமதி பா சிவநாதன் பரிசில்கள் வழங்குவார்.

யாழ்ப்பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி. வேலாயுதம் நிறுவியவர் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். [சி]

மடுத்திருவிழா

துப்பாக்கி கொண்டுவர தடை

(முருங்கன்)

மருத மடுமாதா திருவிழாவில் கலந்து கொள்ள வரும் யாத்திரிகர்கள், தம்முடன் துப்பாக்கிகளை எடுத்துவர வேண்டாம் என்று மன்னார் அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இத்திருவிழா ஜூன் 23 - ஜூலை 2ந் திகதிவரை நடைபெறும் காலங்களில் மடுவைச் சுற்றியுள்ள காடுகளில் யாத்திரிகர்கள் வேட்டையாடுவதைத் தவிர்க்கும் பொருட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

இதே வேளை மடுரோட்டில் உள்ள தேக்கம் ஆற்றில் யாத்திரிகர்கள் நீராடுவதற்கும் ஆலய சுற்றாடலில் வானொலிக் கருவிகளைப் பயன்படுத்துவதற்கும் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

(ஜ)

வாபஸ் பெறக் காரணம்

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபைத்தேர்தலில் போட்டியிட்ட சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி [சுயேச்சைக் குழு-2] கடைசி நேரத்தில் வாபஸ் பெற்றதற்கு வடபகுதியில் நடைபெற்ற வன்செயல்களும், அவசரகாலச் சட்டத்தினால் மக்கள் சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் வாக்களிக்கமுடியாததே காரணமாகும்" என்று சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி வேட்பாளர் குழுத்தலைவராகப் போட்டியிட்ட திரு பி. ஜே. அன்ரனி விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தலில் மக்கள் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் வாக்களிக்க முடியாத காரணத்தினால் சி. த ஐ முன்னணி [சுயேச்சைக்குழு-2] தேர்தலிலிருந்து வாபஸ்பெறுவதென்ற குழுக் கூட்டத் தீர்மானத்திற்கமைய இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[மா-அ]

வரவேற்பளிப்பர்

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலில் வட்டுக்கோட்டை தொகுதியிலிருந்து உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. சு. பூபாலசிங்கம், திரு. எஸ். நடேசு ஆகியோருக்கு வரவேற்புபசார விழாவொன்றை நடத்துவதற்கு வட்டு தொகுதி தமிழர் விடுதலைக்கூட்டணிக் கிளைகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

மணி வாக்கு

செலவுக்குமேல் கூடுதலாக வருவாயுள்ளவன் தனவந்தன்; வரவுக்குமேலே செலவழிப்பவன் ஏழை.

— புருயெர்

நமது நோக்கு

புரட்சி ஆட்சி

"குடைநிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர், நடைமெலிந்து ஒரு நண்ணினும் நண்ணுவர்"

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் பொதுமக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட ஈரான் ஜனாதிபதி பானிசதார் இன்று தமது உயிர் தப்ப நாட்டைவிட்டு ஓடியதாகவும் அவருடைய மனைவி சிறையில் வைக்கப்பட்டதாகவும் செய்தி சொல்லுகிறது.

ஷாவைக் கவிழ்த்துவிட்ட இஸ்லாமியப் புரட்சி எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறது என்பது இன்றும் மர்மமாகவே இருக்கிறது; சுமார் ஒருவருடம் அது நடத்திய அமெரிக்க பணயக் கைதிகள் நாடகம் நாகரிக உலகத்தை நடுங்க வைத்தது இலகுவில் மறப்பதற்கில்லை.

தினசரி நடைபெறும் தெருச்சண்டைகளும் அரச துரோகிகள் என்ற குற்றத்துக்குட்பட்டவர்கள் பகிரங்கமாகச் சுடப்படும் காட்சியும் புரட்சி ஆட்சி இன்றும் வீறுகொண்டிருப்பதை விளக்குகிறது.

ஜனநாயக ஆட்சியில் நம்பிக்கைகொண்ட மக்களுக்கு ஜனாதிபதியின் இன்றைய அவலநிலை பெரும ஏமாற்றமாகவே இருக்கின்றது.

ஜனாதிபதியின் கடந்த கால அரசியல் வாழ்க்கை அவர் இமாம் கொமெய்னியின் பெரு நம்பிக்கைக்குரிய பெருந்தலைவர் என்பதை வலியுறுத்திவந்தது.

இன்றைய நிலைமையில் ஜனாதிபதி பதவி இழக்கும் கட்டத்தை இமாம் கொமெய்னி தடுக்கமுடியாத வகையில் புரட்சி அரசியல் அமைந்திருக்கிறது.

ஈரானிய ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான இன்றைய மோதலில் பாராளுமன்றத்தின் பெரும்பான்மையினர் ஜனாதிபதியைப் பதவியிலிருந்து நீக்கிவிடுவது நம்பிக்கை எனவும், அவருடைய உயிருக்கே ஆபத்து என்பதும், அவர் நாட்டைவிட்டு ஓடிவிட்டாரென்ற செய்திக்கு ஆதாரமென்று கூறப்படுகிறது.

ஈரானிய இஸ்லாமியப் புரட்சியின் நன்மை தீமை பற்றி நாம் கருத்து வெளியிட முற்படவில்லை. அது அந்தப் புராதன நாகரிகம் படைத்த நாட்டின் கடந்தகால சர்வாதிகார ஆட்சியின் விளைவாகும். இருந்தும் இன்றைய ஜனநாயக நாகரிக வாழ்வின் கோட்பாடுகளுக்கமைய, உலக சமுதாயத்தின் ஒற்றுமைப்பட்ட அமைதி ஆட்சிக்கு வழிகோலுவதாகத் தெரியவில்லை.

எவ்வித தீவிரவாதமும் கட்டுக்கடங்காவிட்டால் அரசியல் அமைப்பு அர்த்தமற்றதாகப் போய்விடுகின்றது. சமநிலைக்கே [illegible] தலைதாழ்த்தவேண்டுமென்று வற்புறுத்தலும் [illegible] சமய வாழ்வுக்கு முரணான ஊழற் செயல்களுக்கு இடங்கொடுக்க வேண்டுமென்று கோரவில்லை.

ஆட்சி முறையெல்லாம் மக்களின் சமுதாய உணர்வைப் பொறுத்ததே. நாட்டை ஆண்ட தலைவர் தலைமறைவாகும் நிலை. நாட்டைவிட்டோடவேண்டிய [illegible] நிலை. உண்மையான துரோகிகளே உரியது!

ஈரான் ஆட்சிபீடத்தில் இந்த அவமான நிலையை ஜனாதிபதி பானிசதார் இவ்வளவு காலத்தில் தேடியிருந்ததாகத் திடமான தகவல் எதுவும் இல்லை.

இவ்வித மதசார்புடைய புரட்சி ஆட்சியில் போட்டி ஆட்சியும் இரகசியமாகத் தொழிற்படுவது இயற்கை. புரட்சிவென்ற போர்வையில தகுதிவாய்ந்த தலைவர் தங்களின் திட்டத்துக்கு நடந்துகொள்ளவில்லையென்றால், பாராளுமன்ற பெரும்பான்மை உறுப்பினரின் ஆதரவைத் திரட்டுவதும் அரசியல் சண்டித்தனம் இடம்பெறுவதும், ஆட்சியைக் கவிழ்ப்பதும் நடந்தேறக்கூடிய நிகழ்ச்சிகள்.

ஜனாதிபதி ஆட்சியில் பாராளுமன்றம் பலவீனப்பட்டு தன் உரிமையை இழப்பதும், அதற்கு நேர்மாறாக பாராளுமன்றம் மட்டற்ற பலமடைந்து ஜனாதிபதியின் நிர்வாக அதிகாரத்தை நிராகரிப்பதும், ஒரு நாணயத்தின் இருபக்கங்களெனலாம். முந்தியது ஜனாதிபதியை ஒரு சர்வாதிகாரியாக மாற்றவல்லது. பிந்தியது அவரைப் பதவியிலிருந்திறக்கவும் ஏன் நாட்டைவிட்டு ஓட்டங்காட்டவும் வல்லது.

எமது நாட்டில் நிலவிவரும் பாராளுமன்ற ஆட்சிமுறை, எதிர்க்கட்சியின் தனித்துவ அம்சம், ஜனாதிபதியின் தலைமைக்கு உரமூட்டும் அமைச்சரவை இவற்றில் தளம்பம் ஏற்படுமானால் நாம் இதுவரை அனுபவித்துவந்த ஜனநாயக [illegible] சமத்தை நாடும் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியை முடிவுகட்ட முயல்வதும், எதிர்க்கட்சியின் கொள்கைப் பிளவால் ஒற்றுமையற்று இயங்குவதும் எங்கள் நாட்டின் இன்றைய குறைகளாகும்.

கூரம்பு என்று வீரியம் பேசாமல் குழப்பமடைந்த ஈரானிலிருந்து நாம் பாடம் படிப்பதும் நல்லது.

இன்று சுண்டிக்குளி புனித யுவானியார் திருநாள்

போலி மதவேடங்கள் வேண்டா!

இறைவனின் வாய்மொழியாய்
கிறிஸ்துவின் முன்மொழி செய்
அலைபுரளும் நதி மருங்கில்
அருள்நதியாய் நின்றவனே
அருளப்பத் திருமுனியும்
அன்புடனே போற்றிடுவோம்!

●

போலி மதவேடங்கள்
நீலித்தனக் கோலங்கள்
நிகிலத்தில் இனிவேண்டா
நீராலே பிறப்புற்று
கிறிஸ்துவின் பிணைப்புற்று
அன்பு பகிர்வு பக்தியிலே
வாழ்ந்திடவே மதமென்றும்
வாழி அருளப்ப திருநாமம்!

— பற்றிமாகரன்

"'ஜீப்பி'லிருந்து பெற்றோல் எடுத்து கடைக்கு ஊற்றி தீவைத்தனர்!

புகார் செய்யச்சென்ற நான் விரட்டப்பட்டேன்"

கடை உரிமையாளர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

"நான் பார்த்தபோது எனது கடைக்கு முன்னால் 150 பேர் நின்றார்கள், 3 அல்லது 4 பேர் எனது கடைக் கதவை கோடரியால் கொத்திக்கொண்டிருந்தனர். அந்த நேரம் வீதியில் வாகனங்கள் இருக்கவில்லை, அவர்கள் கடையை உடைத்து உள்ளே அரைமணிநேரம் நின்றார்கள் 10 அல்லது 15 பேர்தான் உள்ளே சென்றார்கள். மற்றவர்கள் வெளியில காவல்புரிந்துகொண்டிருந்தனர். சிலர் துப்பாக்கிகளைத் திருந்தனர் மற்றவர்கள் இரும்புக் கம்பி, பொல்லுகள் வைத்திருந்தனர். உள்ளே சென்று கடையை கொள்ளையடித்தனர்"

யாழ்ப்பாணம் ராஜனி ரேடேர்ஸ் உரிமையாளர் த. பாலசிங்கம், பொலிஸ் உயர்மட்ட விசாரணைக் குழு முன் சாட்சியமளிக்கையில மேற்கண்டவாறு கூறினார்.

பொலிஸ் குழுவைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் அதிபர் பி. ஜெயசிங்கம் வாக்குமூலத்தைப் பதிவுசெய்தார்.

பாலசிங்கம் மேலும் கூறியதாவது;

"சம்பவம் பற்றி நான் ஜனாதிபதி பிரதி பொலிஸ் மா அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் யாழ் அரசாங்க அதிபர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பியிருந்தேன் என் கடையில் [illegible] இருந்தனர், வழக்கமாக நான் இரவு 8-30 மணிக்கு கடையை பூட்டுவேன்.

கடையில் கொள்ளை

"1ம் திகதி இரவு நான் கடையின் மேல்மாடியில் தங்கியிருந்தேன் இரவு 2-30 மணியளவில் சத்தம் கேட்டு எழுந்து பார்த்தபோது என் கடையை கொள்ளையடித்தனர். கடைக்குள் சென்றவர்கள் [illegible] போட்டுவிட்டு சாமான்களை எடுத்து வெளியில் நின்றவர்களிடம் கொடுத்தார்கள் நான் மேல்மாடியில் இருந்து இதனைப் பார்த்தேன்

"அச்சமயத்தில் 31 சிறி 3144 இலக்கமுடைய ஒரு பச்சை ஜீப் அங்கு வந்தது மற்றும் ஒரு நீல டிறக்கும் வந்தது அந்த டிறக்கில் இலக்கத்தை அவதானிக்கமுடியவில்லை டிறக்கில் இருந்தவர்கள் கொள்ளையடித்தவர்களுடன் கதைத்துவிட்டு சென்றனர் பின் கொள்ளையடித்த சாமான்களுடன் அவர்கள் டிறக் சென்ற பக்கம் சென்றார்கள்

பச்சை நிற ஜீப்

சிறிது நேரத்தில் 31 சிறி 3144 இலக்கம் கொண்ட பச்சைநிற ஜீப் என் கடைப் பக்கம் வந்தது, அந்த ஜீப்பிலிருந்து பெற்றோல் எடுக்கப்பட்டது. அந்த பெற்றோலை எனது கடைக்கு ஊற்றினார்கள் அதன்பின் தீ வைத்தார்கள். அங்கு வந்த பொது மக்கள் தீயை அணைக்க முயற்சித்தபோது அவர்களை தாக்கி விரட்டிவிட்டார்கள். கடையின் முக்கால்பகுதி எரிந்த பின்னரே கொள்ளையர்கள் அவ்விடத்தை விட்டுச் சென்றார்கள்.

"கடையில் அந்நேரம் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும் 2 லட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்களும் 7 600 ரூபா ரொக்கப் பணமும் காசோலைகளும் இருந்தன

காலையில் சென்றபோது

காலை 4 30 மணியளவில் நான் கடைக்குச் சென்றேன். அங்கு எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டு எரிந்துகிடந்தன கொள்ளை நடைபெற்ற போதோ அல்லது தீப்பிடித்த போதோ பயத்தினால் நான் கடைக்குச் செல்லவில்லை

"31ம் திகதி பிற்பகல் 2-30 மணியளவில் நான் கடையில் சாமான்களை ஒழுங்குசெய்துகொண்டிருந்த சமயம், 'ரீ' சேர்ட்டும் நீளக்காற்சட்டையும் அணிந்த சுமார் 10 பேர் என் கடைக்குள் வந்தார்கள். அங்கிருந்த கைக்கடிகாரங்களை நன்றாகப் பார்வையிட்டனர் விற்பனைக்கிருந்த மற்றும் சாமான்களையும் பார்த்தனர். ஆனால் அவர்கள் எவற்றையும் வாங்கவில்லை. அவர்கள் பொலிசாரகவோ, இராணுவத்தினராகவோ காணப்பட்டனர் இவர்கள் கொள்ளையடித்து தாக்குவதற்கு முன்னேற்பாடாகவே, அன்று பகல் வந்து பார்த்துச் சென்றார்கள் என நான் இப்போது கருதுகின்றேன் அவர்களை நான் அடையாளம் காட்டமுடியாது. என் கடையைக் கொள்ளையடித்தவர்களையோ, தீவைத்தவர்களையோ அடையாளமகாட்ட இயலாது.

(4ம் பக்கம் பார்க்க)

யாழ். பொதுசன நூலகருக்கு வேண்டுகோள்

தமிழர் அறிவாலயம்-தென்கிழக்காசியாவிலேயே பிரபல்யம் வாய்ந்த மாபெரும் நூலகம் அக்கிரமம்பிடித்த அறிவற்ற ஒரு மிலேச்சக் கூட்டத்தினரால் வண பிதா லோங், தமிழ்த்தாய் போன்ற காவற் தெய்வங்கள் பார்த்திருக்க, அண்மையில் தீயுடன் சங்கமமாகியது. அதனை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவர நாம் செய்யவேண்டியவை என்ன?

அன்புள்ள, கருணை நோக்குள்ள தமிழர் நல்வாழ்வு விரும்பிகள் பலர், உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்து பல நூல்களை இந்நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்ய விரும்புகிறார்கள். அதனை எங்கு எப்படிச் செய்வது என்பதனை அறியாது அல்லலுறுவதைக் காணக்கூடியதாகவிருக்கிறது இதற்கெல்லாம் எமது யாழ் பொது நூலக நூலகர், நூலகத்திற்குத் தேவையான நூல்களின் பெயர்களை வரிசைப்படுத்திப் பட்டியல் வைத்திருப்பின், அன்பளிப்போர் தமது பெயர்களைக் கையொப்பமிட்டு அன்பளிப்பதற்கு வசதி ஏற்படுத்திய பெருமைக்குரியவராவார். அதுமட்டுமன்றி, ஒரே புத்தகங்கள் பல, தேவையற்ற முறையில் நூலகத்திற்கு அன்பளிப்படைவதையும் தவிர்த்தவராவார். அதற்குப் பதிலாக

மக்கள் கருத்து

இல்லாத நூல்களை வரச்செய்ய வழிசெய்வதாயமையும் இவற்றையெல்லாம் நூலகர் தமது திறமையை இத்தருணத்தில் காண்பிப்பதற்கு அரியதோர் சந்தர்ப்பமாகும் இதற்கு அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தை வளநிறையாக்கிய மத்திய நூலகர் திரு. ஆர் என் தம்பையாவின் உதவியை நாடினும் நலம்பயக்குமென நம்புகிறேன் யார் குத்தியும் அரிசி ஆக்கி யாழ் மக்களின் பெருமையையும் சரித்திரச் சான்றுகளையும் மீண்டும் மிளிரச் செய்யவேண்டிய பாரிய பொறுப்பு தற்போதுள்ளது

அது மட்டுமல்லாது, நல்ல தரம்மிக்க தமிழ் நூல்களை நம் தமிழ் நாட்டு முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரன், எதிர்க்கட்சி முதல்வர் தமிழ் தென்றல், கலைஞர் மு கருணாநிதி மற்றும் தமிழ்ப்பற்றுமிக்க அறிஞர்களிடமிருந்தும் பெறுவதற்கு முயலவேண்டும்

க சி இராஜேஸ்வரன்

ஆடியபாத வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

எமது பாக்கியம்

எமது அபிமான பத்திரிகையான 'ஈழநாடு' காரியாலயம் கல்விச் செல்வம் பற்றியோ, பத்திரிகை தர்மம் பற்றியோ அறியாதவர்களின் கைவலாத்காரத்தால் சேதமுற்றதைக் கேட்டு மிகவும் வேதனையுற்றோம் எமது ஒரே நாளாந்தப் பத்திரிகையான 'ஈழநாடு' பற்பல இன்னல்களின் மத்தியில் தன் தனித்துவத்தை இழக்காமல் [illegible]மான முறையில் சுவையான செய்திகளுடன் வெளிவருவதைக்கண்டு பொறாமைப்பட்டோர் அன்றி ஈழ தமிழரின் இன்னல்களை உலகறியச் செய்கிறது என்ற காரணத்தினாலா காரியாலயத்தையும், அச்சகத்தையும் ஏன் ஈழநாடு ஊழியர்களின் உடமைகளையும் நாசமாக்கினார்? எனினும் மீண்டும் எமது கைகளில் அந்தக் கலையிலேயே தவழும் குழந்தையாக ஈழநாடு தவழ்வது பெரிய பாக்கியமாகும் ஈழநாடு காரியாலய புனரமைப்புக்காக ஒரு நிதி சேர்க்கப்படல் மிகவும் முக்கியமாகும் அதன் மூலம் பத்திரிகையின் வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்தலாமென நம்புகிறேன் நடைபெற்ற சம்பவத்தால் துன்புறும் தங்கள் ஸ்தாபன ஊழியர்கட்கு எமது அன்புடன் ஆழ்ந்த அனுதாபங்களை உரித்தாக்குகிறோம்

ஆ கந்தசாமி

கரவெட்டி.

சவூதி கப்பல்மீது தடை உத்தரவு!

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் தங்கூரமிட்டிருக்கும் "அல்றியாட்" என்ற சவூதி அரேபியக் கப்பலை 'கைது' செய்யும்படி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் பிரதம சுங்க அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு உப நீதிமன்ற நீதிபதி திரு எஸ். சிவா செல்லையா முன்னிலையில் சட்டத்தரணி க. பூபாலசிங்கம் தாக்கல் செய்த மனுவைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சட்டத்தரணி க. பூபாலசிங்கம் தாக்கல் செய்துள்ள மனுவில்; இக்கப்பலின் பொறியியலாளர்களாகக் கடமைபுரிந்த எச். பெர்ணாண்டோ. என். மிரண்டோ ஆகிய இருவருக்கும் கப்பல் கம்பெனி, அவர்களின் சம்பளப்பணமாக சுமார் ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கவில்லை என்றும் அத்துடன் என். மிரண்டோ சட்டவிரோதமாக கப்பலிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுவை விசாரித்த நீதிவான் எஸ். சிவா செல்லையா, கொழும்புத்துறைமுகத்தில் நிற்கும் இக் கப்பலைத் தொடர்ந்து பிரயாணம் செய்யாது தடுத்துவைக்கும்படி பிரதம சுங்க அதிகாரிக்கு உத்தரவிட்டு மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

அதிசயமான அணில்வகை

சென்னை ஜூன் 23

ராமநாத புரத்திலுள்ள காடொன்றில் அதிசயமான அணில் வகையொன்று காணப்படுகிறது. இவ் அதிசய வகையைச்சேர்ந்த 30 அணில்கள் இக்காட்டில் உள்ளன. இவ் அணில்கள் ஒரு மீட்டர் நீளமுள்ளதாகவும் உயரமான இடங்களில் கூடு கட்டி வசித்து வருகின்றன. [வெ]

பிரிட்டனில்

சிறைத்தண்டனை பெற்றவர் தேர்தலில் நிற்க முடியாது!

லண்டன், ஜூன் 23

பிரிட்டனில் சிறைத்தண்டனை பெற்றவர்கள் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சட்ட மொன்று பிரிட்டனின் மக்கள் பிரதிநிதிகள் சபையில் கொண்டுவரப்பட்டு கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இச் சட்டமூலத்தை ஆதரித்து 100 பேரும், எதிர்த்து 11 பேரும் மக்கள் பிரதிநிதிகள் சபையில் வாக்களித்தனர். (வெ)

சோவியத்மீது சீனா குற்றச்சாட்டு

பீக்கிங், ஜூன், 23

வட அத்திலாந்திக் ஒப்பந்த ஸ்தாபனத்தை சீர்குலைக்க சோவியத் யூனியன் முயன்று வருவதாக சீனா குற்றம்சாட்டியுள்ளது. மேற்கு ஐரோப்பிய நாடுகளை வஞ்சம் தீர்க்கவும் சோவியத் யூனியன் முயல்வதாக சீனா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிற்கு எதிராக சோவியத்யூனியன் நடந்து வருவதாக நவசீன செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. அமெரிக்காவிற்கு எதிராக சில நாடுகளுடன் சோவியத் யூனியன் ஒப்பந்தங்களை செய்துள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது. (வெ)

வளர்முகநாடுகளுக்கு உதவி:

அமெரிக்கா காலம் தாழ்த்தல்!

லக்சம்பேர்க் ஜூன் 23

வளர்முக நாடுகளுக்கு உதவியளிப்பதில் அமெரிக்கா காலம் தாழ்த்தி வருவதாக லக்சம்பேர்க்கில் நடைபெற்ற ஐரோப்பிய பொருளாதார சமூகநாடுகளின் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இதனால் செல்வந்த நாடுகளுக்கும் வறியநாடுகளுக்குமிடையிலுள்ள பொருளாதார இடைவெளி அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது-

மூன்றுவது மண்டல நாடுகளுக்கான உதவியை செல்வந்தநாடுகள் அதிகரிக்க வேண்டுமென்றும் இம்மகாநாட்டில் கோரிக்கைவிடப்பட்டது.

வளர்முகநாடுகளுக்கான உதவியை பெருமளவில் அதிகரிக்கவுள்ளதாக பிரான்ஸின் புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பிரான்ஸின் அபிவிருத்தியமைச்சர் திரு. ஜூன் பியகொட் தெரிவித்தார். (வெ)

60குடிசைகள் தீக்கிரை?

சென்னை, ஜூன் 23

சென்னைநகரில் ஏற்பட்ட தீவிபத்தொன்றில் 60 குடிசைகள் தீக்கிரையாகியுள்ளது. இத்தீவிபத்திற்கான காரணம் பற்றி தெரியவில்லையென்று கூறப்பட்டது.

இதிலும் ஊழலாம்!

சென்னை, ஜூன். 23

தமிழ்நாட்டில் சாராயப் போத்தல்களை அடைக்கும் வேலைகளில் ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சந்தர்ப்பம் கிடைத்தால் இவ் ஊழல்களை நிரூபிக்கவும் தாம்தயாராகஇருப்பதாகதிரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

கடலூரில் அமைக்கப்பட்டுள்ள சாராயபோத்தல்அடைக்கும் தொழிற்சாலையில் பெருமளவு ஊழல் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [வெ]

மக்கள்விடுதலை முன்னணி

கொழும்பு மாவட்டசபை உறுப்பினரும் கைது!

ஜூலை21ம் திகதிவரை றிமாண்ட்

கொழும்பு

ஈரானிய தூதரகத்தின்முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றின் போது கைதுசெய்யப்பட்ட 59 பேரும் அடுத்த மாதம் முதலாம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்புமாவட்டசபைக்கு அண்மையில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியைச்சேர்ந்த திரு சாந்தா பண்டாரவும் அடங்குவர்.

ஈராக்குக்கு எதிரான போரை உடன் நிறுத்துமாறு சுமார் 100 பேர் கொழும்பில் உள்ள ஈரானியதூதரகத்திற்கு முன் கடந்த வெள்ளியன்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிசார் கூட்டத்தைக் கலைப்பதற்கு தடியடிப் பிரயோகம் செய்தனர்.

இச்சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட 59பேரும் கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போதே விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (இ)

மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(புளியங்குளம்)

கனகராயன்குளம் மகாவித்தியாலய மாணவர்கள் கடந்த மூன்று தினங்களாகப் பாடசாலையைப் பகிஷ்கரித்து வருகின்றார்கள்.

அண்மையில் பாடசாலை அபிவிருத்தி சபைப் பொதுக்கூட்டம் நடைபெற்ற போது பெற்றோர் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரிடமிருந்து நிர்வாகசபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்த பின்னர் புதிய சுற்று நிருபத்திற்கிணங்க ஆசிரியர்களிடமிருந்து நிர்வாகசபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்யுமாறு தலைவர் குறிப்பிட்டதும், ஆசிரியர்கள் வெளிநடப்புச்செய்தனர். வெளிநடப்புச் செய்த ஆசிரியர்கள் தாங்கள் இந்நிர்வாகத்தில் பங்குகொள்ள விரும்பவில்லை என்று கூறினர்.

பாடசாலைச்சுவரிலும் ஏனைய இடங்களிலும், கருங்கரடி இயக்கம் என்ற போர்வையில் சிலர் அவதூறாக எழுதிவருவதாகவும், சிலர் நலன் விரும்பிகள் என்ற பேரில் மொட்டைக்கடிதங்கள் எழுதுவதாகவும் குறிப்பிட்ட ஆசிரியர்கள், இவ்வாறான தொந்தரவுகளினால் வேறு இடங்களுக்கு மாறிச் செல்ல விரும்புவதாகவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து பெற்றோர் புளியங்குளம் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. செ. கணபதிப்பிள்ளையிடம் சென்று ஆசிரியர்களைப்பற்றி முறையீடுசெய்தனர். அதே நேரத்தில் பெற்றோரும் பாதுகாவலரும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை தமதுபிள்ளைகளைப்பாடசாலைக்கு அனுப்புவதில்லை என்று தீர்மானித்துள்ளனர்.

இது சம்பந்தமாக வவுனியா எம். பி. திரு. தா சிவசிதம்பரத்திடம் பெற்றோர் முறையிட்டதைத் தொடர்ந்து வவுனியாபிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். பி. சிவபாதத்திடம் தொடர்பு கொண்டு உடனடியாக நிலைமையைச் சமாளிக்குமாறு வேண்டுகோள் விடுத்ததாகத் தெரியவருகிறது.

நல்லை ஆதீன முதல்வருக்கு அஞ்சலி

(மன்னார்)

"செந்தமிழுக்கும் சிவநெறிக்கும் ஈழத்தில் முதன் முதலாக ஆதீனம் நிறுவி இலட்சிய நெறியில் நின்று பல்கால் உழைத்த தன்னையே அர்ப்பணித்த நல்லை ஆதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாததேசிய ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிநா தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் மறைவு சைவ உலகிற்குப் பேரிழப்பாகும்".

இவ்வாறு மன்னார் சித்திவிநாயகர் ஆலய முன்றலில் அண்மையில் சிவபதம் எய்திய நல்லை ஆதீனத்தவருக்கு அஞ்சலி செய்யும் முகமாக மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் சங்கச்செயலாளர் செ. பரராசசேகரம் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-.

காட்சிக்கு எளியவர், இனிய பண்பும் உயர்ந்த கல்வி ஞானமும் உடையவர். இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் சென்று சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி மக்கள் மனதில் இறையுணர்வைப்புகுத்திப் பரப்பியவர். இதனால் ஈழத்தின் பெருமையையும் வெளியுலகிற்கு எடுத்தியம்பிய இருபதாம் நூற்றாண்டு ஆறுமுகநாவலரெனலாம். இச் சங்கத்தால்சென்றாண்டு நடாத்தப்பட்ட திருமுறைவிழாநாட்களில் பிரசன்னமாயிருந்து ஆசிகூறியும், கதாப்பிரசங்கம் செய்தும் பெருமைப்படுத்திய நிகழ்ச்சிகள் இன்னமும் எம் மனதை விட்டு அகலவில்லை.

அப்பெரியாரின் சேவையைத்தொடர்ந்து செய்ய தற்போதைய ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத்தம்பிரான்சுவாமிகளுக்கு இறைவன் அருள் பாலிப்பாராக என வேண்டுவதே நாம் செய்யும் கைம்மாறாகும். (இ)

உலக நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம்

மாஸ்கோ, ஜூன். 22

பெருவாரியான உலக நாடுகளில் வேலையில்லா பிரச்சினை கூர்மையடைந்துள்ளது. என்று "நியூ டைம்ஸ்" சஞ்சிகையில் வெளியான சமூக-பொருளாதாரப் பிரச்சினை பற்றிய ஒரு கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சி பெற்ற மேற்கு நாடுகளிலும் கோடிக்கணக்கான மக்கள் வேலையில்லாத்திண்டாட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சஞ்சிகை கூறுகிறது.

1980ம் ஆண்டில் அமெரிக்காவில் 78லட்சம் பேர் வேலையில்லாதிருந்தனர். அதேவேளையில் இன்னொரு 42 லட்சம்பேருக்கு பகுதிநேர வேலையே உண்டு. வேலையில்லாதோரின் தொகை நாளும் பொழுதும் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. என்றும் இச்சஞ்சிகை எழுதுகிறது.

மேற்கு ஐரோப்பாவிலும் இப்பிரச்சினை கூர்மையடைந்துள்ளது. எனக்கூறும் "நியூடைம்ஸ்" 1975ல் ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகளில் 4, 672 பேர் வேலையில்லாதிருந்தனர். இது 1930ல் 6, 672,000 ஆக உயர்ந்துள்ளது. யுத்த பிற்கால ஜனத்தொகை வளர்ச்சி இந்நாடுகளில் பள்ளிகளிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் படிப்பை முடித்து வெளியேறி, வேலை தேடும் தொகையினரை அதிகரிக்கச்செய்துள்ளது என்று இச்சஞ்சிகை கூறுகிறது.

கருத்தரங்கு

(புளியங்குளம்)

வடமராட்சிப் பகுதியிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச்சங்க நெறியாளர் குழுக்களுக்கான பிராந்தியகருத்தரங்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் கட்டைவேலி ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு எஸ். சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபையும்கூட்டுறவு திணைக்களமும் இணைந்து இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்திருந்தது.

'ஜீப்பி'லிருந்து....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தீ வைத்த அவர்கள்...

"எனது கடையைகொள்ளையடித்தவர்களும் தீவைத்தவர்களும் பொலிஸ்காரர்கள் என நான் சந்தேகிக்கின்றேன். ஏனெனில் அன்றிரவு வந்த ஜீப்பும், டிரக்கும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவை என்று தற்போது அறிகின்றேன். தனிப்பட்ட முறையில் நான் எவரையும் சந்தேகிக்கவில்லை, என் கடையோ, அதற்குள் இருந்த பொருட்களோ காப்புறுதி செய்யப்படவில்லை. கடையின் சேதம் 50 ஆயிரம் ரூபாவாகும். அச்சமயம் எனக்கு வேறுசாட்சியங்கள் இல்லை. பலர் சம்பவத்தை நேரில் கண்டார்கள். ஆனால் அவர்கள் வந்து சாட்சியமளிப்பார்களோ தெரியாது. எனக்கு ஏதும் நடந்து என் உயிருக்கும் ஆபத்து ஏற்படுமானால் அது யாழ்ப்பாண பொலிசாரினாலேயே இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"3ம் திகதி காலை10மணிக்கு நான் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு புகார் செய்வதற்கு வந்தேன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் என் புகாரை பதிவு செய்யமறுத்துவிட்டார்கள். என்னைத்துரத்திவிட்டனர். அதன் பின்னர் தான் நான் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மற்றவர்களுக்கும் அறிவித்தேன். (மா-க)

வெஸ்லி
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்-லதா
நாளை நமதே

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-சாவித்திரி
காத்தவராயன்

5-வது ஜனத்திரள் வாரம்!
சாந்தி (யாழ்நகர்) 10-30 2-30, 6-30, 9-45
சிவாஜி, விஜயா
தர்மராஜா (கலர்)

வெலிங்டன்
யாழ்நகர்
10-30, 2-30 6-00, 9-30
ரஜனிகாந்த் - லதா
ஆயிரம் ஜென்மங்கள்

லிடோ யாழ். நகர்
10-30 2-30, 6-00, 9-30
அழியாத கோலங்கள்
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

மனோகரா தினசரி 10-30, 2-15 4-45, 7-00, 9-30
(யாழ்ப்பாணம்)
CAR
(Action Film)

வின்ஸர் இன்னும் சிலதினங்கள் மட்டும்
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, 2-30, 6-00
சிவாஜி கணேசன் - கே. ஆர். விஜயா
ரிஷி மூலம்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00
★ சிவாஜி ★ ஜெய்சங்கர் ★ ஸ்ரீதேவி
☆ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
பட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

RAJAH Jaffna Daily 10-30, 2-00, 4-30
7-00 9-45
Krakatowa East of Java
(Color Scope-Thrill and Suspence)
From : 27th June '81
A long awaited film that has come to smash over the previous record collection.
BRUSLEY.........?

ராணி- யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
100வது வெற்றித்திருநாளை முன்னிட்டு
மூன்று ரொக்கப் பரிசுகள்.
19-06-81 முதல் 26-06-81 வரை தீ படத்தைப் பார்ப்பவர்களுக்கு இப்பரிசுகள் கிடைக்கும். டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள்
முதல் பரிசு 3000-00, இரண்டாம் பரிசு 1500-00,
மூன்றும் பரிசு 1000-00
★ ரஜனிகாந் ★ ஷோபா இணைந்து வழங்கும்
தீ
மகாராஜா-சுரேஷ் கூட்டுத்தயாரிப்பு
தென்னகத்தில் 100 தினங்கள் ஓடி
வெற்றி முழக்கமிடுவது தீ
காணத் தயாராகுங்கள்

பொருளாதார அடிப்படையில் அடிபணியவைக்கும் முயற்சி"

வெகுஜன இயக்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"ஆட்சியாளர்கள், தமிழ் மக்களை ஆயுதப்படையினரின் அட்டகாசத்தால் அடக்கி ஒடுக்கி ஆட்சிசெய்ய நினைப்பதும், உடைமைகளைச் சேதப்படுத்தி, பொருளாதார அடிப்படையில் அடிபணியவைக்க மூர்க்கத்தனமாக முனைந்து நிற்பதும், முற்போக்குவாதிகள் ஒன்றுபடும் ஐக்கியத்துக்கு வழிவிட்டலாக மறைமுகமாகப் பயன்படுமே தவிர ஆட்சியாளருக்குச் சுபசகுனமாக அமையமாட்டாது".

இவ்வாறு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அறிக்கை மேலும் கூறுவதாவது:

"யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலையொட்டி நடைபெற்ற கோரமான அசம்பாவிதங்கள், ஆயுதப்படையினரின் கட்டுக்கடங்காத வன்செயல்கள், இத்தனையும் முதலாளித்துவப் பாராளுமன்றத் தேர்தல் முறை அரசியல் அமைப்பில் மக்கள் எதிர்நோக்கவேண்டிய ஆபத்துக்களில் ஒன்று என்பதையும் தேர்தல் முறை வெறும் கேலிக்கூத்தே அன்றி மக்களின் மனிதாபிமான உரிமை வாழ்வுக்கு எந்த வகையிலும் பயன்படாது என்பதையும் தேர்தலுக்கு முன் கூறியது போல் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் மீண்டும் இந்த வேளையில் சுட்டிக்காட்டுகின்றது.

"இந்தச் சமூக அமைப்பில் இப்படிப்பட்ட வன்முறைச் சம்பவங்களை அடிக்கடி சந்திக்க வேண்டும் என்ற உண்மையை உணர்ந்துகொண்டும் கடந்த முப்பது ஆண்டு காலத்துக்கும் மேலாக தமிழ் அரசியல் தலைவர்களின் வழிநடத்தல் தீர்க்கதரிசனமற்ற அரசியல் என்பதை யாழ். சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இனிமேலாவது கடந்தகால அனுபவங்களை முன்வைத்து முழுநாட்டுக்கும் பொதுவான அரசியல் பாதையில் வழிநடக்கத் தவறினால் தமிழ்மக்கள் மேலும் இது போன்ற பல சம்பவங்களைச் சந்திக்கநேரிடலாம் என வெகுஜன இயக்கம் கருதுகின்றது.

"இவ்வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து சிங்கள மக்களின் இயக்கங்கள் பல கண்டனம் தெரிவித்தமை தமிழ் மக்களின் எதிர்கால முன்னேற்றத்துக்கும், தேசிய ஐக்கியத்துக்கும் நல்லதோர் அறிகுறியாகும்".

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர்-ராதிகா
ரத்தத்தின் ரத்தம்

இன்றைய பலன்

ஆனிமாதம் 10ம் திகதி
புதன்கிழமை
(24-6-81)

மேடம்: அதிர்ஷ்டதேவதையின் அணைப்பில் உங்களுக்கு அதிர்ஷ்டம் கிடைக்கலாம். திரைப்படத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாகமளிக்கக்கூடும். செல்வாக்குடன் ஒருவரின் ஆதரவும் தப்பாமல் உண்டு.

இடபம்: வாழ்க்கை மத்திநிலையில் நடைபெறும், எதிர்பாராத தடைகளில் முன்னேற்றம் பாதிக்கப்படும் சகோதரவழிமூலம் சஞ்சலமான செய்தியும் கிடைக்கலாம். உடல்நலத்தைப் பேணவும்.

மிதுனம்: விரக்திநிலை உருவாகும். வேண்டாத தொடர்புகளால் தொல்லைகள் தோன்றக்கூடும். உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம். நன்கு சிந்தித்தபின் செயலாற்றுக.

கடகம்: சிறப்பான சம்பவங்கள் இடம்பெறும். சிறுடன் வாழ்வீர். பெரிய இடத்துச் சிநேகம் அனுகூலம் கொண்டுவரும். வியாபாரத்துறையில் விருத்தியும் செல்வாக்கும் பெருகும்.

சிங்கம்- எதிர்பாராத நிகழ்வுகளால் வேதனைப்படுவீர்கள். சிறிய விபத்துக்குக்கூட குறைகேட்க நேரிடும். தூரஇடத்திலிருந்து செய்தியொன்று கிடைக்கலாம். பெரியோரைக் கனம்பண்ணுவது சிறப்பாகும்

கன்னி- நல்லதைச் செய்வீர்கள். நலன் பெருகும். பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள் சமூகத்தில் மதிப்பு உயரும். அரசியல்வாதிகள் அதிர்ஷ்டதேவதைகளை அணைத்துக்கொள்வர்.

துலாம்; கலைஉலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ் பரவும் இவர் புதிய வாகனத்தை கொள்முதல்செய்வதில் கவனம் செலுத்துவர். வாழ்க்கையில் வசந்தம் நிலவும்.

விருட்சிகம்- மனதில்அமைதி குன்றும். எதிரிகள் எக்காளமிடுவர். மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும். அமைதியே நன்று.

தனுசு: களவிரவழியால் நன்மைகள் வந்து சேரும். குடும்பத்தில் தென்றல்வீசும். கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளை ரசிப்பதில் காலத்தைக் கடத்துவீர்கள். செலவினங்கள் கட்டுப்படியாகவே இருக்கும்.

மகரம்: அதிக அலைச்சல் உங்களுக்குச் சிரமத்தைத் தரலாம். தொழில்துறையில் வருமானம் மிகவும் மட்டாகவே இருக்கும் நண்பர்களின் ஆசை வார்த்தைகளில் மயங்கவேண்டாம் சுமாரான தினம்.

கும்பம்: பூமியால் லாபமுண்டு புத்திரர் புகழும் சேரும் பொதுசனத்தலைமைக்கான வாய்ப்பும் கிடைக்கும். உடல்நலம் பாதிக்கப்படுமாகையால் வாய்ப்புப்பதார்த்தங்களை நீக்கிக்கொள்ளவும்.

மீனம்: எதிர்பாராதவகையில் பொருள் விரயமாகும். கொடுக்கல்வாங்கல்களில் பிணக்குகள் ஏற்படும் நண்பர்களைப் பகைத்துக்கொள்வீர்கள். வீணான சிந்தனைகளுக்கு இடமளியாது இருக்கவும்.

சோதிடக் கலாநிதி
க. வேலுப்பிள்ளை

திக்கரை முருகன் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர், களபூமி திக்கரை முருகப் பெருமானின் வருடாந்த உற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றமுடன் ஆரம்பமாகிறது. 30-ம் திகதி தேர்த் திருவிழாவும், ஜூலை 1-ந் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். 2-ம் திகதி காரைநகர் இளைஞர்களால் நடாத்தப்படும் பூங்காவனத் திருவிழவுடன் உற்சவம் பூர்த்தியாகிறது

காலரா பீதி!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள திருமலை, மூதூர்ப் பகுதிகளில் காலரா எனப்படும் வாந்திபேதி மீண்டும் பரவி வருகிறது.

மூதூரிலுள்ள குடியேற்றப் பகுதியில் நான்குபேர் காலரா காரணமாக மரணமானார்கள். திருமலையிலும் இந்நோயினால் சிறுவன் ஒருவன் மரணமானான்.

இதே வேளையில் மூதூர், திருமலையில் மேலும் காலரா நோய் பரவாதிருக்க பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர் [து]

புங்குடுதீவில் சுகாதாரவாரம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் அடுத்தமாதம் 7ம் திகதிமுதல் 12ம் திகதி வரை சுகாதாரவாரம் கொண்டாடப்படவிருக்கிறது.

ஆடம்பரமற்ற முறையில் இச் சுகாதாரவார நிகழ்ச்சிகள் இடம்பெறவிருப்பதாகப் புங்குடுதீவு சுகாதார பரிசோதகர் திரு க. தங்கவேலாயுதம் தெரிவித்தார்.

சுகாதாரவாரத்தின் போது இங்குள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையே பேச்சு, கட்டுரை, சித்திரப்போட்டிகள் இடம்பெறும்.

பொத்துவில்

2-வது எம். பி.க்கு பாதுகாப்பு

[கொழும்பு]

பொத்துவில் இரண்டாவது எம். பி, திருமதி ரங்கநாயகி பத்மநாதனின் கொள்ளுப்பிட்டி இல்லத்துக்கு பொலிஸ் பாதுகாப்பளிக்கப்பட்டிருக்கிறது.

தற்காப்பு ஏற்பாடாகவே இந்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [து]

மடு உற்சவம்

(மன்னார்)

மடுமாத ஆலய ஆனிமாத வருடாந்த உற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அடுத்தமாதம் 2ம் திகதி நடைபெறும் விசேஷ பூஜையுடன் ஆனிமாத உற்சவம் முடிவடையும். [அ]

அரசியல் குழு ஒன்றின் நடவடிக்கைபற்றி சந்தேகம்!

[கொழும்பு]

நாட்டிலுள்ள அரசியல் குழு ஒன்றின் நடவடிக்கைகள் பற்றிப் பொலிஸ் புலனாய்வு குற்றவியல் போன்ற பல பிரிவுகளினாலும் புலன் விசாரணைகள் நடத்தப்பட்டுவருகின்றன.

கடந்த சில வாரங்களாக நாட்டின் பல இடங்களில் நடத்தப்பட்டுள்ள ஆர்ப்பாட்டங்களுக்கு இந்த அரசியல் குழுவே பின்னணியில் இருந்துள்ளது எனப் பொலிஸ் உயர்மட்டப் புலனாய்வுப் பிரிவினர் கருதுகின்றனர். ஏற்கனவே, கண்டி. களனி. கொழும்பு ஆகிய இடங்களில் இந்த இரகசியப் பொலிஸ் புலனாய்வுகள் நடைபெற்றுள்ளன.

இந்த அரசியல் குழுவினர் களனி, பேராதனை, கொழும்பு ஆகிய பல்கலைக்கழகங்களில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளதாகவும் பொலிஸார் கருதுகின்றனர். இந்த ஆர்ப்பாட்டங்கள் பாரதூரமானவை அல்லவென்ற பொலிஸார் கருதியபோதிலும் மாணவர் சபைத் தேர்தல்களில் போட்டியிட்ட சில மாணவர்கள் இந்த அரசியல் வர்ணத்தைப் பயன்படுத்திக் கொண்டுள்ளதாகக் கருதப்படுகின்றது.

யாழ்.பொதுசன நூல் நிலையம்

[யாழ்ப்பாணம்]

அண்மையில் தீக்கிரையாக்கப்பட்ட யாழ். நூல் நிலையம் இனிமேல் மாநகர சபை அலுவலகத்தின் கிழக்குப்புற மண்டபத்தில் தற்காலிகமாக இயங்கும்.

சபையின் நிதிக் குழுவின் சிபார்சை அடுத்தே இது இவ்வாறு இயங்க ஆரம்பிக்கப்படுகிறது.

சிறுவர் பகுதியும் வாசிகசாலையுமே இங்கு இப்போது இயங்கும். [ஆ]

யாழ். நுலகத்தை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பொலிஸ் இராணுவம் வந்து கேட்டால் அவற்றை உதவிக்குக் கொண்டுபோகும்படியும் சொன்னார்.'

பயமில்லாவிடின்...

'பயமில்லாவிட்டால் நீங்களே பௌசர்களை பெரிய கடைக்கு கொண்டுபோகும்படியும், அங்கு அதிகாரிகள் சென்றிருப்பதாகவும், அவர்களும் உதவி செய்வார்கள் என்றும் சொன்னார்.

உடனடியாக நான் 2 பௌசரையும் 6 ஊழியருடன் பெரியகடைப் பகுதிக்கு கொண்டு சென்றேன். பெரிய கடை மின்சார நிலையத்தில் பௌசர்களை விட்டுவிட்டு அங்கு நின்றோம்.எவரும் உதவி கோரிவரவில்லை.

மீண்டும் அங்கு ஆணையாளர் போன்பண்ணி பொது நூல் நிலையம் எரிவதாகவும், உடனடியாக அங்குபோய் தீயை அணைக்கும்படியும் சொன்னார். நாங்கள் பொது நூல் நிலையத்திற்குச் சென்றபோது அது எரிந்துகொண்டிருந்தது. நாங்கள் அவற்றை அணைக்க முயற்சி எடுத்தும் பயனில்லாமல்போய் விட்டது.'

நேற்றும் உயர் பொலிஸ் விசாரணை குழுமுன் பலர் சாட்சியமளித்தனர்.

யாழ். பெரிய கடை பழைய மார்க்கட்டில் பழக்கடை வைத்திருந்தவர்களும், சில்லறை வியாபாரம் செய்தவர்களும் சாட்சியமளித்தனர். [க]

பயிற்சி

றேடியோ - டெலிவிசன் எயர்கொண்டிசனிங் - வெல்டிங் மூன்றுமாத டிப்ளோமா பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம். 29-6-81 அனைவரும் சேரலாம். நாஷனல் [அக்கடமி மொம்சாக் கட்டிடம் 11, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 0100

மாற்றம்பெறும்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பூரண ஒத்துழைப்பு

பொலிஸ் விசாரணைக்குப் பொதுமக்கள், குறிப்பாக பாதிக்கப்பட்டவர்கள் அளித்த ஒத்துழைப்புக் குறித்துக் கேட்கப்பட்டபோது பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம்;

"பூரண ஒத்துழைப்பு வழங்கினார்கள்; என்று குறிப்பிடும் அதே நேரத்தில்,எனது வாழ்க்கையில் இப்படி ஒரு ஒத்துழைப்பு முன்னர் எப்பொழுதுமே கிடைத்ததில்லை என்பதையும் பெருமையுடன் கூறுகின்றேன்" என்றார்.

"வன்செயல்களினால் பாதிப்புக்குள்ளானவர்கள் சம்பவங்களை அவதானித்தவர்கள் அளித்த சாட்சியம் எமக்குப் பெரும் திருப்தியைக் கொடுத்தது. எமது கோரிக்கையின் மீது பலர் மிகவும் ஆர்வத்துடன் வந்து சாட்சியமளித்தனர். முறைப்பாடு செய்தனர். தமிழர் விடுதலை கூட்டணியினரின் ஒத்துழைப்புபாராட்டத்தக்கது" என்று தெரிவித்த டி. ஐ. ஜி. திரு. ஆர். சுந்தரலிங்கம்; விசாரணை முடிவடைந்ததும் பல முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்று கூறினார்.

"நீங்கள் விசாரணை செய்யப்படும் காலப்பகுதியில் நிகழ்ந்த மரணங்கள் பற்றியும் விசாரணை நடைபெறுமா?" என்று கேட்டபோது, 'இம்மரணங்கள் கொலைகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டிருப்பதாலும் இதில் பாதுகாப்புப்படையினர் சம்பந்தப்பட்டிருப்பதாலும் இம்மரணங்கள் குறித்தும் விசாரணை நடைபெறும். இதற்கு முன்பாக சட்டமாதிபரின் ஆலோசனை பெறப்படும்" என்று கூறினார்.

"சம்பவங்கள் பற்றி விசாரணை செய்துள்ள நாம் சேதவிபரங்கள் குறித்தும் மதிப்பீடு செய்துள்ளோம். சுமார் 10 கோடி ரூபா அளவு சேதம் விளைவிக்கப்பட்டிருப்பதாக விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

நிலைமை இவ்வாறிருக்க யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் உயர் மட்டப் பொலிஸ் அதிகாரிகளின் விசாரணையிலிருந்து மேலும் பலர் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இதுவரை யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து 30 பொலிசாரும், சுன்னாகத்திலிருந்து 6 பொலிசாரும் காங்கேசன்துறையிலிருந்து 3 பொலிசாரும் இதுவரை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் 05-க்குமதிகமான உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் உள்ளனராம்

விசாரணைக்குழுமுன் 40-க்கு மதிகமானவர்களின் வாக்குமூலங்கள் நேற்றுப் பதிவுசெய்யப்பட்டது. இதுவரை 225க்கு மதிகமானவர்களின் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

தீவைப்பு...

[1-ம் பக்கத். தொடர்ச்சி]

வன்முறைச் சம்பவங்களின் போது கை, கால் பாதிக்கப்பட்டோரும் அடங்குவர். 5 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணையில் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

நேற்றைய விசாரணையின் முடிவில் சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர், உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்படச் சுன்னாகம், காங்கேசன்துறைப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 14 பேர் இடமாற்றஞ்செய்யப்பட்டுள்ளனர் [மா

தியாகர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி[

வீரசிங்கம் கணேசராசா ஆகிய இருவரும் மாததிரம் இன்று அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட இருப்பதால் தாங்கள் அவர்கள் சார்பில் ஆஜராவதாகத் தெரிவித்தனர்.

சிறை அதிகாரிகள் மேற்கூறப்படும் சந்தேகநபர்களுள் ஒருவரையும், கடைசியாகக் கைதானவரும், அடையாள அணிவகுப்புக்குத் தேவைப்படாதவருமான காரைநகரைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை அரியபுத்திரனையும் சேர்த்துத் தவறுதலாக அழைத்துவந்துள்ளதாகத் தெரியவந்தது, இதனையடுத்து அணிவகுப்பு நாளைவரை ஒத்திவைக்கப்பட்டது. [இ]

கமலம் கொலை
2 எதிரிகளும் இன்று ஆஜர்

[டலோனி]

கமலம் கொலை வழக்கின் முதலாம் எதிரியான ராஜ்குமாரும் [ராஜன்] இரண்டாம் எதிரியான பொன்சியஸ் பெர்னாண்டோவும் [ரேபி] அவர்களின் கைவிரல் அடையாளங்களை பரிசீலனை செய்வதற்காக பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. ஸ். மகேசன் முன்னிலையில் இன்று புதன்கிழமை ஆஜர் செய்யப்படவுள்ளனர். [வெ]

இன்ஸ்பெக்டர் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ். வன்செயல்கள் குறித்த பொலிஸ் விசாரணைகளை அடுத்து சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பரணகே, சப் இன்ஸ்பெக்டர் ஜயதிலகா, சார்ஜன்ட் ஒருவர், இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ஆகியோர் வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பரணகே ஹட்டனுக்கும், ஹட்டனிலிருக்கும் பொன். சுகுணேந்திரன் சுன்னாகத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. [இ]

இப்படியும் நடக்கிறது

அவன் ஒரு பக்திப் பாடகன், உணர்ச்சி கொட்டப் பாடுபவன், அவனை அறியாதவர்கள் மிகச்சிலரே என்று கூறலாம்.

உண்ணாவிரத நேரத்திலும் அவனுக்கு அழைப்பு வந்தது.

கொதிக்கும் வெய்யிலிலும் பாடினான். பாடினான் என்றால்... மெய்சிலிர்க்க உருகினான்.

"இப்படை தோற்கின் எப்படை வெல்லும்..." உள்ளம் உருகிற்று.

மெய்சிலிர்த்துநின்ற பல நூற்றுக்கணக்கானவர்களிடமிருந்து மானசீகமான வாழ்த்துக்கள் அவனுக்குக்கிடைக்கிறது. இது வழக்கம். இத்தனைக்குமிடையே, "இந்தப் பாடலையும் பாடுங்கள்" என்று 'நீங்கள் கேட்டவை' வேறு!

உண்ணாவிரதம் முடிகிறது. பாடகன் வீடுதிரும்புகின்றான்....

வீட்டில் ஆறு ஜீவன்கள், பாடகன் 'வரவை' எதிர்பார்த்து காத்துக்கிடக்கின்றன.

"ஊர் ஊரா பாடுறீங்க... கூட்டம் கூட்டமாக பாடுறீங்க.. என்னத்தைக் கண்டீங்க. உங்கபாட்டுக்கேட்டு ஊர்ச்சனங்கள் கைதட்டுவாங்க... மாலை போடுவாங்க ஆனா நாங்க... என்னத்தைக் கொண்டுவாறீங்க... எதையும் விழுங்கி நானும் பிள்ளைகளும்..."

மனைவியின் நியாயமான கேள்வி.

பலரை மகிழ்விக்கும் பாடகன் அவன். ஆனால் அவன் வீட்டிலோ...!

விடியாதா?

0 0 0

செருப்புத் திருடர்கள் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

பொதுக்கூட்டங்கள், வைபவங்கள், ஏன் திருமண வீடுகளிலும் செருப்புகள் திடீர் மறைவுக்குள்ளாவதுண்டு. கண்டுபிடிப்பது சிரமம்தான். இந்தவரிசையில்— —

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உண்ணாவிரதத்தை மக்கள் அங்கு பக்திபூர்வமாக அனுஷ்டித்துக்கொண்டிருக்கின்றனர்.

தலைவர்கள் பேசுகின்றார்கள். கூட்டத்தினர் மெய்மறந்து கேட்டுக்கொண்டிருக்கின்றனர். இத்தனைக்கும் மத்தியில், ஒரு தொண்டர் கூட்டம் 'அந்த' விஷயத்தில் கண்ணும் கருத்துமாகக் கடமைபுரிகிறது. தலைவர்களின் உயிரை மட்டுமல்ல, உடமைகளைக் காப்பதிலும் இத்தொண்டர் படைக்கு அவதானம்.

உண்ணாவிரதம் முடிகிறது. தலைவர்கள் எழும்புகின்றனர். கூட்டமும் கலையமுயற்சிக்கிறது. உண்ணாவிரதத்தில் உணர்ச்சியுடன் பேசிய மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு சி. சம்பந்தமூர்த்தியின் பெறுமதிமிக்க அழகான செருப்பைக் காணவில்லை!

—ஊடுருவி

—சிவில் உடையில் நின்ற பொலிசார்—

பைப்பினால் என்னைத் தாக்கி பண்ணைக்கடலில் தள்ளினர்'

யாழ். வானொலிநிலைய அதிகாரி சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் மண்டைதீவு அஞ்சல் நிலையத்தைச் சேர்ந்த பொறியியலாளர் திரு. ஜயசூரியாவின் மகள் திருமதி காந்தியும் நானும் யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து வானொலி நிலையம் நோக்கி எமது வானொலி நிலைய ஜீப்பில் சென்றுகொண்டிருந்தபோது டஸ்லைப் பாலத்துக்கு அண்மையில் எம்மை மறித்த காக்கி காற்சட்டையும் ஷேர்ட்டும் அணிந்த நான்கு பொலிசார் 11 மாதக் குழந்தையுடன் ஜீப்பிலிருந்த திருமதி காந்தியை கத்திமுனையில் பயமுறுத்தி தூஷித்ததுடன் என்னை ஜீப்புக்கு வெளியே இழுத்து இரும்புப்பைப்பினால் அடித்து என்னை கடலில் தள்ளினார்கள்.

இவ்வாறு மண்டைதீவு வானொலி நிலையப்பொறுப்பதிகாரி திரு. சண்முகம் கதிரவேலு யாழ்.வன்செயல்கள் குறித்து விசாரணை செய்துவரும் பொலிஸ் உயர் மட்டக்குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளிக்கையில் கூறினார்.

திரு. சண்முகம் கதிரவேலு தமது சாட்சியத்தில் கூறியதாவது:

'2-6-81ல் 31 ஸ்ரீ 2905 இலக்க அரசாங்க ஜீப்பில் சாரதி சபாரத்தினமும்,நானும் பொறியியலாளர் திரு. ஜயசூரியாவின் மகள் திருமதி காந்தியும் யாழ் ஆஸ்பத்திரியிலிருந்து மண்டைதீவு அஞ்சல் நிலையத்தை நோக்கிச்சென்றுகொண்டிருந்தோம். பண்ணைப் பொலிஸ் விடுதியைத் தாண்டி நாம் சென்றுகொண்டிருந்தபோது காக்கிக் காற்சட்டையும் சேட்டும் அணிந்திருந்த நான்கு பொலிசார் எமது ஜீப்பை மறித்தனர். இருவர் கைகளில் 6 அல்லது 8 அடி நீளமான இரும்புப் பைப்புகளும், மற்றிருவர் கைகளில் கிறிஸ் கத்தியும் இருந்தன. எமது ஜீப் சாரதி இறங்கியதும் அவரை இந்த நால்வரும் கைகளால் தாக்கினர். சாரதி உடன் ஓட்டம்பிடித்தார், அவரைத் துரத்திச்சென்று மீண்டும் இழுத்து ஜீப்பருகில் கொண்டுவந்தனர்.

திருமதி காந்தியை யார் எனக் கேட்டறிந்ததும் 'ஒரு சிங்களப்பெண்மணிக்கு தமிழருடன் என்ன வேலை' எனத் தூஷித்தனர். அத்துடன் ஒரு பொலிஸ்காரர் கிறிஸ்கத்தியை திருமதி காந்தியின் மார்புக்கு நேரே பிடித்தார்.

குட்டிமணி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் டாக்டர் சால்காடோ நேற்று சமர்ப்பித்த வைத்திய அறிக்கையில் களுபோவில ஆஸ்பத்திரியில் குட்டிமணியைத் தாம் நேற்று பரிசோதித்ததாகவும், அவரது கையெழுத்தும் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலையம் அச்சகத்தில்
1981ம் ஆண்டு ஜூன் மாதம் 24-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper at the General Post Office. Sri Lanka
Regd No. JB 100/36/81 P. O. Box 49. Jaffna. தற்காலிக தொலைபேசி: 7707